ஜாதிகளை மறக்க விரும்புகிறோம்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.கழகத் தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா	சென்னை: ஆவணி 3வ. வியாழன் (19—8—54)	மலர்: 2
இலங்கையில் 10 சதம்	வெளியூர்: ஆவணி 4வ. வெள்ளி (20—8—54)	இதழ்: 57

'சுதந்திர உரிமை எதேச்சாதிகாரத்திற்கு உட்படக்கூடாது!'

'சர்க்கார் ஊழியர் நடத்தை விதி 20-(1), அரசியல் அமைப்பின் 19(1)-ஏ பிரிவுக்கு முரணானது!'

கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு

கல்கத்தா, ஆக. 17—

"1926-ம் ஆண்டு சர்க்கார் ஊழியர்களின் நடத்தை விதிகள் பற்றிய 20 (1) விதி, அரசியல் அமைப்பின் 19 (1)—ஏ பிரிவின் படி மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் அடிப்படை உரிமைகளுக்கு நிர்ப்பந்தங்களை ஏற்படுத்துவதால், அது அரசியல் அமைப்புக்கு விரோதமானது,"

—என்று கல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி சின்ஹா வழக்கொன்றில் தீர்ப்பளித்தார்.

கல்கத்தா தபால் தந்தி ஊழிய பட்டதாரக்கப்படுகிறது. இது ராக இருந்த கிருஷ்ண சந்திர சாட்டர்ஜி, 1949-ம் ஆண்டில், துண்டுப் பிரசுரம் ஒன்றை வெளியிட்டு, தபால்—தந்தி ஊழியர்கள் 'ஒற்றுமை நாளை'க் கொண்டாட வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்.

'இச்செய்கை, சர்க்கார் ஊழியர்கள் விதியின் 20 (1) விதிக்கு விரோதமானது,' என்று, சர்க்கார், கிருஷ்ண சந்திர சாட்டர்ஜியை வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்தனர்.

நீதிபதி தனது தீர்ப்பில் கூறியதாவது:—

"எந்த சர்க்கார் ஊழியரும் சர்க்காருக்கு சங்கடம் விளைவிக்கக்கூடிய எதையும், சொல்லவோ, எழுதவோ கூடாதென்று சர்க்கார் ஊழியர்கள் நடத்தைப் பற்றிய 20 (1)-வது விதி தடுப்பதால், இது ஒவ்வொரு குடிமகனுக்கும் பேச்சு சுதந்திரம், கருத்தை எடுத்துரைக்கும் சுதந்திரம் இவைகளை வழங்கும் அரசியல் சட்ட 19 (1)-ஏ. பிரிவிற்கு நேர்மாறாக இருப்பதாக மனுதார் சாரிபில் கூறும் வாதத்தை நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்.

"சர்க்கார் ஊழியர் நடத்தை விதியின் வாசகம் மிக்க நிச்சயமற்றதாகவும், பொதுப்படையாகவும் இருக்கிறது. இதில் உள்ள வார்த்தைகளுக்கு நிர்ணயமான பொருள் இல்லை. இதன் வாசகம், பொதுவாகவும், திட்டமற்றதாகவும் இருப்பதால், இதன் நோக்கத்தை ஒருவர் ஊகித்து தெரிந்துகொள்ள முடியாது. எதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கிறது என்று என்பதை ஒருவர் தெரிந்து கொள்ள முடியாது. இதனால் பேச்சு கருத்துக்களைத் தெரிவிக்கும் சுதந்திரம் மற்றிய அடிப்படை உரிமை, அதிகார பதவியில் உள்ள சிலரது இருப்பிக்கும், எதேச்சாதிகாரத்துக்கும் உட் அரசியல் அமைப்புச் சட்டம் உத்தரவாதம் அளிக்கும் அடிப்படை உரிமை பற்றிய கருத்துக்கு நேர்மாறாக இருக்கிறது."

சணல் சாகுபடி

நடப்பு ஆண்டில்: சணல் சாகுபடி விஸ்தீரணம் 13,44,000 ஏக்கராக இருக்குமென்று தெரியவருகிறது.

பிரகாசம் மந்திரி சபை மீது.....

நம்பிக்கையில்லாத் தீர்மானம்!

கம்யூனிஸ்டுகள் கொணர்வர்!

விஜயவாடா, ஆக. 18—

மதுவிலக்கை ரத்து செய்துவிட வேண்டும் என்ற ராமமூர்த்தி விசாரணைக் குழுவின் முடிவுகளை அமுல் செய்ய வேண்டும் என்ற ஆந்திர சட்ட சபையின் தீர்மானத்தைப் புறக்கணிக்கும் வகையில் ஆந்திர அரசாங்கம் இன்னமும் மதுவிலக்கை ரத்து செய்யாது இருப்பது ஜனநாயக முறைக்குப் புறம்பானதாக இருப்பதால் வருகிற சட்டசபைக் கூட்டத்தில் ஆந்திர சட்டசபைக் கம்யூனிஸ்டு கட்சியினர், ஆந்திர அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவருவர் எனத் தெரிகிறது.

ஆந்திர மாநில கம்யூனிஸ்டு கட்சியின் கூட்டத்தில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

ஏன் நினைப்பூட்டுகிறீர்கள்

இந்திய சர்க்கார் ஜாதிகளை ஒழிக்கச் செய்தது என்ன?

ஜனநாயகவாதியின் கேள்வி!

'பிரித்து வைக்கிறான்' என்று ஆங்கிலேயனைக் கண்டித்த நாம் மீண்டும் பிரித்துவைப்பது சரியா?

'பிற்பட்டவகுப்பு' என்றால் போதுமே! ஜாதியின் பெயரை ஏன் குறிப்பிட வேண்டும்?

"நமது பிரதம மந்திரி இந்தியாவில் உள்ள ஜாதி முறைகளைப் பல தடவைகளில் கண்டித்திருக்கிறார். ஆனால், ஜாதிகளை எப்படி நீக்குவது என்பதுதான் பிரச்சினையாகும் இதற்காக சர்க்கார் என்ன செய்திருக்கிறது?

"கடந்த காலத்தில், சட்டசபையில் இடம் ஒதுக்கியும் சர்க்கார் அறிக்கைகளிலும், மக்கள் எண்ணிக்கைக் கணக்குகளிலும் ஜாதிகளைக் குறிக்குமாறு வற்புறுத்தியும், ராணுவத்தில் வலிமை உள்ளவர்கள், வலிமை இல்லாத ஜாதிகள் பிரிவினையை ஏற்படுத்தியும், நேரடியாகவும், மறைமுகமாகவும் ஜாதிப் பிரிவினைகளை பிரிட்டிஷ்காரர்கள் வளர்க்கிறார்கள் என்று குற்றம் சுமத்தினோம்.

"இப்போது சுதந்திரம் அடைந்தபின்னரும், இந்தப் பழைமையான இழிநிலை நீடிக்கிறது என்பது வருந்தத்தக்கது.

"உள்நாட்டிலாகா அமைச்சராலயம், இப்போது ஒவ்வொரு சர்க்கார் ஊழியரும் தங்கள் ஜாதியைப் பதிவு செய்ய வேண்டுமென்று சமீபத்தில் உத்திரவிட்டிருக்கிறது.

"பிற்பட்ட வகுப்பினர்களுக்கு சர்க்கார் அலுவலகங்களில் எவ்வளவு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிவது இதன் நோக்கமாக இருக்கலாம். யூனியன் சர்வீஸ் கமிஷனில் செய்வதுபோன்று சர்க்கார் இந்த புள்ளி விபரங்களை சுலபமாக, ஒவ்வொரு ஊழியரையும், 'நீங்கள் பிற்பட்ட வகுப்பினரா?' என்று கேட்பதன்மூலம், இந்த புள்ளி விபரங்களைச் சேர்க்கலாம்.

"இப்படிச் செய்வதால், 'எந்த ஜாதி' என்று குறிப்பிடுவதைத் தடுக்கலாம். ஏனெனில், நாங்கள் மறந்துவிட விரும்புகிற இந்தப் பிரச்சினையை மீண்டும் நினைவூட்டாமல் இருக்கலாம்."

—இவ்வாறு, 'ஜனநாயகவாதி' என்று கையெழுத்திட்டு, ஒரு தோழர், கல்கத்தாவிலிருந்து வெளியாகும் "ஸ்டேட்ஸ்மென்" இதழில் எழுதியுள்ள கடிதமொன்றில் கூறியுள்ளார்.

புறப்படுவீர்!

காஞ்சீபுரம் மாநாடுகள்-ஆக. 21, 22

★

சமுதாய சீர்திருத்தம், நமது நாட்டின் அரசியல் வாழ்வு, நம்மை எதிர்நோக்கியிருக்கும் பிரச்சினைகள்! இவைகளை விளக்க காஞ்சியில் இரு மாநாடுகள்!

21—8—54: சமூக சீர்திருத்த மாநாடு

நாட்டு மக்கள் உள்ளத்தில், நகைச்சுவையுடன் நல்ல கருத்துக்களைப் பதிய செய்யும் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் மாநாட்டிற்குத் தலைமை வகிக்கிறார்.

கலை கலைக்காக மட்டுமேல்ல; அது மக்களின் முன்னேற்றத்திற்கு, முன்மொழியும் வன்மை பெற்றது என்ற உண்மையை எடுத்துச் சொல்லும் புரட்சி நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் மாநாட்டைத் திறந்து வைக்கிறார்.

புதுமைக் கருத்துக்களைக் கேட்க நமக்கெல்லாம் நல்லதோர் வாய்ப்பு!

★

22—8—54: அரசியல் மாநாடு

தூத்துக்குடித் தோழர்—செயல் வீரர்—ஏகாதிபத்திய ஆட்சியிலே சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட கழக முன்னணி வீரர்—எதிர்ப்புக் கஞ்சா இதயமும், கட்டமை உள்ளமும் கொண்ட தோழர் இரா சு. தங்கப்பழம் மாநாட்டிற்குத் தலைமை வகிக்கிறார்.

'கல்லக்குடி' அறப்போர், திராவிடத்தில் ஒரு பொன்னான அத்தியாயம்! அந்த அறப்போரை முன்னின்று நடத்தியவர்—சோழனின் தலைநகரில் கழகத்தைக் கட்டிக் காக்கும் தோழர் எம். எஸ். மணி மாநாட்டைத் திறந்து வைக்கிறார்.

★

கருத்துக்கு விருந்து! இதுவரை செய்து முடித்த அரிய பல செயல்களையும், இனி செய்ய வேண்டியவைகளையும் கூடிப் பேச ஒரு வாய்ப்பு!

இரண்டு நாட்களிலும் பொதுச்செயலாளர் அண்ணா, இயக்கத்தின் முன்னணி வீரர்கள் கலந்துகொள்கின்றனர்.

இரண்டு நாட்களிலும் அறிவியக்கப் பிரச்சார நாடகங்கள் நடைபெறுகின்றன.

அறிவுச் சோலைக்கு அழைக்கிறோம்! கருத்துக் கனிகளைச் சுவைக்க வாரீர்! வாரீர்!!

விஜயநகரம் ராஜா கைது!

விவசாயிகள் அறப்போரில் கலந்து கொண்டாராம்!

கர்னூல், ஆக. 18—

விஜயநகரம் ராஜாவும், ஆந்திர பி.-சோ. கட்சி செயலாளரும், சட்ட சபை உறுப்பினருமான பி. வி. ஜி. ராஜூ என்பவரும், இன்னும் 13 பேர்களும், பி.-சோ. கட்சியினர், கரிவேனு கிராமத்தில் நடத்தி வரும் விவசாயிகள் அறப்போரில் கலந்து கொண்டதற்காகக் கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

இதற்கு முன் கடந்த ஆக 16-ந் தேதியன்று, சுமார் 20 பெண்களும், 5 ஆண்களும் இதே காரணத்திற்காகக் கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

கைது செய்யப்பட்ட பெண்களில் இரண்டொருவர் ஆந்திர சட்ட சபை உறுப்பினர்களின் மனைவியாராம்.

கைதான எல்லாப் பெண்களின் மீதும் வழக்குத் தொடருவதற்காக அவர்கள் நீதிபதியின் முன் நிறுத்தப்பட்டுள்ளனராம்.

அதற்கு முன் கைது செய்யப்பட்ட 22 பேர்களுக்கு மூன்று மாதம் முதல் 6 மாதம் வரை கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்திருப்பதாகவும் தெரிகின்றது.

நம் நாடு
தி. மு. க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 19—8—54 வியாழன்

அதிகாரத்தில் இருப்பவர்களுக்கு......!

இந்திய உபகண்டம் ஆங்கில ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு அறுபதாண்டுகளுக்கு மேலாயிற்று.

இந்த அறுபதாண்டுகளில், இந்திய சுயராஜ்யத்தின் அவசியத்தை ஆங்கிலேயனுக்கு உணர்த்த எத்தனை போராட்டங்கள் நடத்தப்பட்டன?

தண்டி யாத்திரை. வரிகொடா இயக்கம், கொடி சத்தியாக்கிரகம் இப்படி எத்தனையோ இயக்கங்கள்; ஒவ்வொன்றிலும், ஆயிரக்கணக்கில், உரிமை வேட்கை கொண்டவர்கள் ஆர்வத்தோடு கலந்துகொண்டனர்.

சுதந்திரம், சுதந்திரம் என்று தாக்கு மேடை ஏறியோர் ஏராளம்! குண்டாந்தடியடி பட்டோர் எண்ணற்றவர்!

இப்படி அறுபதாண்டுகள் நடத்தப்பட்ட போராட்டம் யாருக்கு எதிராக என்று எண்ணுகிறீர்கள்?

உலகுக்கெல்லாம் ஜனநாயகப் பண்புகளைப் பரப்புவதே தன் நோக்கம் என்று கூறி வந்த ஆங்கிலேயனுக்கு எதிராக!

உலகிலேயே மிகச் சிறந்த பார்லிமெண்டரி அரசாங்கத்தை நடத்தி வரும் பிரிட்டனை எதிர்த்து!

இப்படி, மக்களாட்சி முறையைக் கடைபிடித்துக்கொண்டு, அறிவுத் துறையில் சிறந்து விளங்கும் ஆங்கிலேயனுக்கு, இந்திய சுதந்திரத்தின் உரிமையைக் கூற, நாமும் வாழ வேண்டும் என்பதை உணர்த்த, அறுபதாண்டுக் காலம் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது

இதைவிட இன்னும் மோசமான நிலை பிரெஞ்சிந்திய மக்களுடையது! மனித சமுதாயத்தின் முதற் புரட்சியை நடத்திய பிரெஞ்சு சர்க்கார், புதுவை மக்களின் உரிமைக் குரலை மதிக்க மறுத்தது!

பிறகு வழக்கம்போல், போராட்டங்கள் துவக்கப் பெற்றன. மக்கள் ஒன்றுகூடினர்; உணர்ச்சி பெற்றனர்; ஊராள்வோனின் உருட்டலுக்கும் மிரட்டலுக்கும் பயப்படாமல் அறப்போரில் குதித்தனர்!

நிலைமை கட்டுக்கு அடங்காது, மக்கள் மன உறுதியோடு புறப்பட்டுவிட்டனர் என்பதைக் கண்டவுடன், பிரெஞ்சு சர்க்கார் தன் அரியாசனத்தை விட்டு இறங்கியது. "மேலும் போர் தேவையில்லை; சமரசமாகவே இந்த நாட்டை விட்டு போகிறோம்!" என்று அறிவு வந்த நிலையில் கூறிற்று.

போர்ச்சுக்கல் இந்தியாவின் நிலை, இந்த இரண்டையும்விட இன்னும் நன்றாகக் கவனிக்கப்பட வேண்டியது.

"கோவா பகுதிகள் போர்ச்சுகலுக்குச் சொந்தமானவை; இதைப் பற்றிப் பேசவேண்டிய சர்க்காருக்கு உரிமை கிடையாது!" என்று பதினெட்டாம் நூற்றாண்டில் இருக்க வேண்டிய முழு எதேச்சாதிபதியத் திமிரோடு, இன்று பேசுகிறார், போர்ச்சுகல் பிரதமர் சலாசர்!

இதை எதிர்த்து 'மக்கள் கிளர்ச்சி' துவங்கிவிட்டது. சலாசரின் பிடிவாதமும், ஆதிபத்திய எண்ணமும், மக்களின் பெருவாரியான எதிர்ப்பின் மூலம் விரைவில் மாறும் என்று எதிர்பார்க்கிறோம். மாற வைக்க வேண்டியது நம் கடமையாகும்!

இந்திய உப கண்டத்தில் ஆதிக்கம் செலுத்திய, செலுத்திவரும் ஏகாதிபத்தியங்கள் மற்ற விஷயங்களில் நாகரீக யுத்தியோடு இருந்தபோதிலும், ஏன் இப்படி சுதந்திரப் போராட்டங்களை வளரவிட்டனர்? எதற்காக ஆயிரக்கணக்கான மக்களை பலி வாங்கினர்?

இந்த இடத்திலேதான் கொஞ்சம் சிந்திக்க வேண்டியிருக்கும்.

உலகத்தில் எந்தக் காலத்திலும், எந்த விஷயத்தையும் 'நியாயம்' என்ற அளவிலே யாரும் ஒத்துக்கொள்வதில்லை.

ஒரு விஷயம், நீதியானது, நேர்மையானது, உண்மையானது என்று எவ்வளவு தெளிவாக எடுத்துக் காட்டினாலும் அது ஒத்துக்கொள்ளப்படுவதில்லை!

இந்திய சுதந்திரம்—நியாயமான கோரிக்கை!

ஆனால், ஒத்துக்கொள்ளப்படவில்லை. அந்த கோரிக்கை நியாயமானது என்பதை நிரூபிக்க மக்கள் மன்றம் ஏறி, மக்கள் உதவி பெற்று, நாட்டிலே நூதன போராட்டங்களை நடத்தி, பல மக்களை பலி கொடுத்த பின்னர்தானே, வெள்ளையன், 'சுதந்திரக் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டியதுதான்,' என்ற முடிவுக்கு வந்தான்!

புதுவை—காரைக்கால் விடுதலை—மிக நியாயமானது;

ஆனால், அதை அறையிலே, அறிவு மன்றங்களிலே கூறப்பட்டபோது ஒத்துக்கொள்ளப்படவில்லை! பிரெஞ்சு சர்க்காருக்கு சுதந்திரத்தின் பெருமை தெரியாததல்ல! இருந்தாலும், பெரும் போராட்டம் தேவைப்பட்டது, அவர்களுக்கு புதுவை-காரைக்கால் சுதந்திர உணர்ச்சியை உணர்த்த!

இதே மாதிரிதான் கோவாவிலும் நடக்கிறது எந்த உரிமைக் கோரிக்கைகளும் அறிவு மண்டபத்திலோ, ஆராய்ச்சிக் கூடத்திலோ கூறப்படும்போது, யாரும் ஒத்துக்கொள்வதில்லை. அதின் நியாயம் இருப்பது அதிகாரத்திலிருப்பவர்களுக்குத் தெரியாத காரணத்தால் அல்ல; ஒத்துக்கொண்டால், அதனால் தங்கள் அதிகாரம், பதவி, பணம் இவைகள் குறையுமே என்ற பயம்தான்! இந்த பயம், அதிகாரத்திலிருக்கும் எந்த அரசியல்வாதியையும் விட்டதில்லை; ஆகவேதான், எந்த கோரிக்கையும் மக்கள் மன்றம் கொண்டு வரப்படுகிறது. அங்கே மக்கள் ஒத்துழைப்பையும், நல்லெண்ணத்தையும் பெற்றபின் அந்தக் கோரிக்கைகள் பலம் பெறுகின்றன. பின்னுள் பெருவாரியான மக்களைத் தாங்கிச் செல்லும் எந்தக் கோரிக்கையையும், அந்த நிலையில் ஆதிபத்தியம் புரிபவர்கள் தடுக்க முடிவதில்லை. தானே நியாயத்திற்குக் கட்டுப்படுகின்றனர்; ஆகவே, ஜனநாயக நாட்டின் கடைசியில் மக்களை கடைசி நீதிபதியாகிறார்கள்!

இந்த பொது விதியை மனதிலே கொண்டுதான் நாம் கொண்டுவரும் எந்தத் திட்டத்திற்கும் மக்கள் ஆதரவை முதலில் தேடுகிறோம்.

திருவாங்கூர்—கொச்சி தமிழர்களும் அதையேதான் செய்கின்றனர்!

திரு—தமிழர் பகுதிகள் தமிழகத்தோடு சேர வேண்டும் என்று கூறுவது நியாயத்தின்பாற்பட்டது. நேர்மையோடு நடக்கக் கடமைப்பட்டவர்கள், திரு—கொச்சி தமிழர் கோரிக்கை சரிதான் என்பதை உடனே ஒத்துக்கொண்டு, அதற்கு மேல்தான் மற்ற நடைமுறை விஷயங்களைப் பேசியிருக்க வேண்டும். அதைச் செய்யாமல், அந்த கோரிக்கையைப் புறக்கணிக்கும் வகையில் அறிக்கைகள் விடுவதும், 'மொழிவழி மாகாணங்கள் மாத்திரம் போதாது; பொருளாதார வசதி வாய்ந்த மாகாணங்கள் தேவை' என்று தத்துவங்கள் பேசுவதும், அதே நேரத்தில் தமிழ்ப் பகுதிகளில் திரு—கொச்சி சர்க்கார் போட்ட ரோலை, திறந்து வைத்த பாலத்தையும் விளக்குவது:—இப்படி நீதியோடு கூடிய கோரிக்கையைப் புறக்கணிக்க அதிகாரத்திலிருப்பவர்கள் முயற்சிக்கும் போது, இயற்கையாகவே பிரச்சினை மக்கள் மன்றம் செல்கிறது; போராட்டம் துவங்குகிறது. அதிலே பலாத்கார சம்பவங்கள் நடைபெற்றது, அரசியலில் இருக்கும் ஒருசில காட்டுமிராண்டிக் கொள்கையுடையவர்களைக் காண்பிக்கிறதே தவிர மற்றபடி கோரிக்கையின் நியாயத்தை யாரும் மறுக்க முடியாது.

சுதந்திர தின விழாவிலே பேசிய சென்னைப் பிரதமரும் திண்டுக்கல்லிலே பேசிய திருவாங்கூர் பிரதமரும் டில்லியிலிருந்து கடிதம் எழுதும் நேரு பண்டிதரும் இந்த உண்மையை மறந்துவிடக்கூடாது.

திரு—கொச்சி தமிழர் போராட்டம் நியாயமானது. ஒரு மொழி பேசும் மக்கள் ஒன்றாக வாழ நினைப்பது இயற்கை. அதை அனுமதிப்பது சரியென்பது மாத்திரமில்லை; பல்வேறு மொழிகளையும் பேணி வளர்க்கப் போவதாகக் கூறும் நேரு பண்டிதரின் கடமையாகும்.

இவைகளை இன்று அதிகாரத்திலிருப்பவர்கள் உணர வேண்டும். இல்லையேல் மக்கள் உணர்த்துவர்; ஆனால், பலாத்கார முறையில் அல்ல; சாத்வீக முறையில்! அறப்போரின் முழு இலக்கணப்படி—கண்ணியம், கட்டுப்பாடு, நேர்மையோடு!!

சைப்ரசில் விடுதலைக் கிளர்ச்சி!

அடக்குமுறை-சட்டப் புத்தகங்கள் கொளுத்தப்பட்டன!

கிரீசுடன் இணைய மக்கள் திரளுகின்றனர்!

'உரிமைக்காக உயிர் கொடுப்போம்' என்று கூறும் மாணவர்கள்!

ஏதன்ஸ், ஆக. 18—

ஏதன்ஸ் பல்கலைக் கழகத்தினைச் சேர்ந்த மூவாயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் ஏதன்ஸ் நட்டுப் போர்வீரர்களின் நினைவுச் சின்னத்தின் முன் சைப்ரஸ் அடக்குமுறைச் சட்ட புத்தகங்களைத் தீயிட்டுக் கொளுத்தினர். பின்னர், அவர்கள் அந்த நினைவுச் சின்னத்தின் முன்பு மண்டியிட்டு வணங்கி, சைப்ரஸை பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திலிருந்து விடுவிக்க உறுதி கொண்டனர்.

உறுதி எடுத்து முடிந்ததும், மாணவர்களை, பல்கலைக் கழகத்தின் தலைவர் ஊர்வலமாக அழைத்துச் சென்றார். ஊர்வலமாகச் செல்லும்போது அவர்கள் சைப்ரஸ், கிரீஸ் ஒற்றுமை வேண்டும்,' என்று முழக்கமிட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களிடம் பல்கலைக் கழகத் தலைவர் பேசுகையில், கிரீசின் "ஆசிரியர்களின் ஒற்றுமைக்கான போராட்டத்தைத் தலைமை வகித்து நடத்துவார்களென்றும், பிரிட்டனுக்கு எதிராக வெறுப்பையும் ஆவேசத்தையும் வளர்ப்பவர்கள்" என்றும் கூறினார்.

சைப்ரஸ் மக்களும், கிரேக்கர்களும், நாகரிகத்துடன் வாழ்ந்தபோது பிரிட்டிஷாரர்கள், 'மாவ்மாவ் இயக்கத்தினர் போன்று வாழ்ந்தார்கள்,' என்று அவர் மேலும் கூறினார்.

'அன்னிய ஆதிக்கக்காரர்கள் ஒழிக' என்று முழக்கமிட்டு, அவர் தனது பேச்சை முடித்துக் கொண்டார்.

மாணவர்கள் மலர் இந்த ஆர்ப்பாட்டங்களின் போது 'யூனியன் ஜாக்' கொடியினைக் கொளுத்தினர் என்று தெரிகிறது.

சைப்ரஸ் நகரமான நிகோசியாவில், கிரேக்க சர்ச்சைச் சேர்ந்த பிஷப் மகாரியஸ், சைப்ரசின் அடக்குமுறைச் சட்டங்களை கண்டித்தார்.

ஒரு உண்சாலில் ஆறாயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் கூட்டத்தில் பேசுகையில், அவர், 'பிரிட்டிஷாரர்களின் ஆதிக்கத்திலிருந்து சைப்ரஸ் மக்களை விடுவித்து, கிரீசுடன் இணையுமாறு உதவவேண்டும்,' என்று கன்னிமேரியை வேண்டிக் கொண்டார்.

"எங்கள் கிளர்ச்சியை அடக்குமுறைச் சட்டங்களினால் அடக்கிவிட முடியும் என்ற நினைப்பு மிகவும் கேவலமானது; நாங்கள் ஒருபோதும் அடக்குமுறைக்குப் பணிய மாட்டோம்; சிறைச்சாலைகளைக் கண்டோ, நாடு கடத்தப்படும் நிலைமையைக் கண்டோ நாங்கள் அஞ்சப் போவதில்லை," என்று அவர் கூறியதைக் கேட்ட மக்கள், "நாங்கள் தயார்," என்று முழக்கமிட்டனர்.

"சைப்ரசுக்காக பிரிட்டன் அளிக்கும் அரசியல் சீர்திருத்தங்கள் தேவையில்லை; நாங்கள் வேண்டுவது, கிரீசுடன் சைப்ரஸ் இணைய வேண்டுமென்பதே! இதைய் புனிதப் போரை இடையூறுகளுக்கிடையிலும் நாங்கள் தொடர்ந்து நடத்துவோம்"

என்று பிஷப் கூறியவுடன், மக்கள், "நாங்கள் இரத்தம் கொடுக்கிறோம்,"

என்று பதில் அளித்தனர்.

ஜப்பானில் 5 லட்சம் பேருக்கு வேலையில்லை!

சர்க்கார் கவலை!

டோக்கியோ, ஆக. 18—

ஜப்பான் சர்க்கார், நாட்டிலே காணப்படும் வேலையில்லாத் திண்டாட்டத்தை எப்படிப் போக்குவது என்பது பற்றி யோசிக்கிறதாம்!

ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலையின்றி கிராமங்களுக்குத் திரும்புகின்றனராம்! அதே நேரத்தில் ஏராளமானவர்கள் வேலை தேடி நகரங்களுக்கு வருகின்றனர் என்று தெரிகிறது.

முதலாளிகளிடம் சம்பளம் கொடுக்க போதிய பணமின்மையால், பல தொழிலாளர்கள் நான்கு மாதங்களாக சம்பளம் வாங்காமலே வேலை செய்தார்கள் என்று தெரிகிறது.

சர்க்காரின் புள்ளி விபரங்களின்படி மே மாதத்தில் 5,80,000 பேர் ஜப்பானில் வேலையின்றி இருந்தார்கள் என்று தெரிகிறது.

தெரிந்து கொள்ளுங்கள்

★

1. இந்தியாவில் உள்ள 61 பொது உபயோக மின்சார உற்பத்தி நிலையங்களில், 1954 ஏப்ரல் மாதத்தில் மொத்தம் 6049 இலட்சம் கிலோவாட் மின்சார சக்தி உற்பத்தி செய்யப்பட்டது. 1953 ஏப்ரல் மாதத்தில் உற்பத்தியான மின்சார சக்தியின் அளவு, மொத்தம் 5,266 கிலோவாட் ஆகும்.
2. 1953—54-ம் ஆண்டில், கடல் மார்க்கமாக நடைபெற்ற இந்திய வர்த்தகத்தின் மொத்தப் பெறுமானம் 1,066 கோடி ரூபாய். இதில் இறக்குமதியின் பெறுமானம் 543 கோடி ரூபாயும், ஏற்றுமதியின் பெறுமானம் 523 கோடி ரூபாயும் ஆகும்.

இந்திய சர்க்கார் வசம் உள்ள உணவுத் தானியக் கிடங்குகளில் மொத்தம் 2 இலட்சம் டன் உணவுத் தானியத்தைச் சேமித்து வைக்கலாம்.

3. பல்வேறு தொழில்களில் வேலை பார்த்து வரும் பெண்களில் சுமார் 50-லிருந்து 80 சதவிகிதத்தினர் வரை கலியாணமானவர்கள்; அவர்களில் சுமார் 20-லிருந்து 50 சதவிகிதத்தினர் வரை விதவைகள்.

பொதுச்செயலாளர் அண்ணாதுரைக்கு ஆரணி நகரசபை வரவேற்பு

திரு. வி. க. படத் திறப்பு விழாவும், பாராட்டும்

ஆரணி (வ. ஆ) நகர சபையி னர், தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர் களுக்கு ஒரு வரவேற்பு அளித் தனர்.

நகரசபை கட்டடத்தில், மறைந்த தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் உருவப் படத் தைத் திறந்து வைக்க திரு அண்ணாதுரை அவர்களை அழைப் பது என, நகரசபை ஒரு மனதா கத் தீர்மானம் நிறைவேற்றி யிருந்தது.

அதன்படி ஆரணி கோட்டை மைதானத்தில் திரு. வி. க. அவர்கள் உருவப் படத்தை தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை அவர்கள் திறந்து வைத்தார்.

அதுபோழ்து, ஆரணி நகர சபையார், ஏற்கனவே முடிவு செய்தபடி, பொதுச்செயலாளர் அண்ணாதுரைக்கு வரவேற்பு இதழ் படித்தளித்து, மகத் தான தோர் வரவேற்பளித்தனர்.

நகரசபைத் தலைவர் சீனிவா சன் அவரை வரவேற்றார்.

மார்க்சிஸ்ட் கட்சியினரான காங் கிரஸ் உறுப்பினர் துரைசாமி அவர்கள் பொதுச் செயலாள ருக்கு மலர் மாலை அணிவிப்பதில் பெருமைப்பட்டுக் கொண்டார்.

திரு. வி.க. அவர்களின் உரு வப் படத்தைத் திறந்து வைத்து பொதுச்செயலாளர் அண்ணா துரை அவர்கள், திரு. வி. க.-வின் சேவைகள் குறித்தும், அவர் நாட்டு மக்களால் போற் றப்படுவதற்கான காரணங்களை விளக்கியும் அரியதோர் உரை நிகழ்த்தினார்.

குறிப்பாக, இந்த நாட்டு தொழிலாளர் நலனுக்காக திரு வி. க. செய்த மகத்தான பணியை வெகுவாக மக்கள் பாராட்டக் கடமைப் பட்டிருப்ப தாகப் பொதுச் செயலாளர் கருத்தறிவித்தார்.

தனக்குத் தரப்பட்ட வரவேற் புக்கு நன்றி தெரிவிக்கையில், பொதுச் செயலாளர் அண்ணா துரை அவர்கள் குறிப்பிட்ட தாவது:—

"என்னைப் போன்ற ஒருவ னுக்கு ஏதாவது வரவேற்புகள் தருவதானால் நகரசபையில் எதிர்ப்புகள் பல எழும்பும்; ஆனால் அப்படி இல்லாமல், நீங் கள் எனக்கு ஒருமித்த மனத்து டன் வரவேற்பளித்து கௌரவப் படுத்தியிருக்கிறீர்கள். அதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு, எதிர்ப்புகள் மிக மிகப் பழக்கமானவை; எதிர்ப்பு கள் பலவற்றைச் சந்தித்துப் பழக்கப்பட்டவன் நான்.

ஆனால், அரசியல் கருத்து வேறுபாடுகள் இருப்பினும், மனி தர்கள் மனிதர்களை மதிக்கப் பட வேண்டும் என்ற கருத்து டையவன் நான். எதிரிகளையும் மதிக்கும் மனம் எல்லோருக்கும் வேண்டும்.

நீங்கள் அந்த முறையில் எனக்கு வரவேற்பளித்த வர வேற்பு மேலும் மக்களுக்கு தொடர்ந்து தொண்டு செய்கிற ஊக்கத்தை எனக்கு வெகுவாக அளிக்கிறது.

எனக்கு வரவேற்புத் தந்திருக் கிறீர்கள். உங்கள் நகரசபைக்கு நான் எதுவும் செய்ய இயலாத வனாயிருக்கிறேன். ஏனெனில், நான் ஒரு மந்திரியாக இல்லை என்பதை நீங்கள் அறிந்ததே! என் நன்றியை மீண்டும் உங்களுக் குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை 14-வது வட்ட அழகிரி மன்றம்

15—8—54 மாலை 3 மணிக்கு நடைபெற்ற மன்ற பொது உறுப் பினர்கள் கூட்டத்தில், மன்ற செயற் குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: செ. பாரி; துணைச் செயலாளர்: கே. கோவிந்த சாமி; பொருளாளர்: டி. புரு ேஷாத்தமன்; செயற்குழு உறுப் பினர்கள்: கோ. செங்குட்டுவன், க. செயராமன், தி. ஆ. இராஜா ராதர், க. தங்கவேலன், ம. அ ஆனந்தன், சி. மு. இராஜசேகர லன், தி. ம. பாலகிருஷ்ணன், ராசமாணிக்கம்; மன்றப் பொறுப்பாளர்: கோ. செங்குட் டுவன் ஆகியோர் தேர்ந்தெடுக் கப்பட்டனர்.

டாக்டர் ஆர். கே. சண்முகம் ஞாபகார்த்த வாலிபர் சங்கம்

கரூர், ஆக. 17—

இச் சங்கத்திற்கு கீழ் கண்ட வர்கள் நிர்வாக உறுப்பினர்க ளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்: தலைவர்: ஆர். எம். நடராஜ்; துணைத் தலைவர்: பி. ரத்தினம்; செயலாளர்: பி. எம். கந்த சுவாமி; பொருள் காப்பாளர்: எஸ். சுப்பிரமணியம்.

வ. உ. சிதம்பரனார் கழகத் திறப்பு விழா

8—8—54 காலை 11 மணிக்கு விளாத்திக்குளத்தில், தி. மு. கழ கக் கிளையாக வ. உ. சிதம்பரனார் கழகம் நிறுவப்பட்டது. தோழர் எஸ். கலிங்கன் கழகத் தைத் திறந்து வைத்து, வ. உ. சி. யின் தியாகம் பற்றி குறிப் பிட்டார். பின்னர் தோழர் கேசவன் நேரியபின், தோழர் தங்கவேலன் நன்றி கூறினார்.

• • •

அன்று இரவு 7 மணிக்கு தோழர் பாக்கோய் தலைமையில் வ. உ. சி. கழகச் சார்பாக பொதுக் கூட்டம் நடைபெற் றது. தோழர்கள் கேசவன், தங்கவேலன், நெல்லை சங்கர லிங்கம் எஸ். கலிங்கன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

நிலக்கோட்டை தி. மு. இளைஞர் கழகம்

15—8—54ல், தோழர் பெ. ராமசாமி தலைமையில், பாரதி தாசன் மருத்தறிவு படிப்பகத் தில், உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, புதிய நிர் வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட னர்:- செயலாளர்: ஓ. ச. மு. ச. நடராசன்; துணைச் செயலாளர்: பெ. ராமசாமி; பொருளாளர்: மு. தனிக்கோடி; விளம்பர உறுப்பினர்கள்: ஜெ. சிவசாமி, சு. சேகர்; வருங் உறுப்பினர்கள்: வ. பாஸ்கரன், கு. செல்லம்; செயற்குழு உறுப்பினர்கள்: ச. வெண்மதியன், வ. பழனிக் குமார், க. தியாகராசன், அரங் கண்ணன், மு. தர்மர், சு. செய ராசு, து. திராவிட ராசாராம், வே. செயராசு, எஸ். மாரியப் பன், அ. நாராயணன், பி. சந்திர சேகரன்.

திருவள்ளுவர் திருநாள்

31—7—54 மாலை 5-30 மணி யளவில் மறைமலையடிகள் நூல் நிலையம், திருவள்ளுவர் படிப்ப கம், திரு. வி. க. மன்றம் ஆகிய நிறுவனங்களின் சார்பில், திரு வள்ளுவர் திருநாள் தோழர் ச. மாணிக்கம் தலைமையில் கொண்டாடப்பட்டது. தோழர் க. அன்பழகன், 'திருவள்ளுவர் திருநாள்' என்பது பற்றியும், டி. கே. சீனிவாசன் 'குறள் நெறியும்—அருள் நெறியும்' என்பது பற்றியும், சாதாரவும் பேசினர்.

* * *

8—8—54ல் சென்னை 14-வது வட்டத்தில் அழகிரி மன்றத்தில் திறப்பு விழாவும், திருவள்ளுவர் நாளும், தோழர் த. கு. இராஜா ராதர் தலைமையில் நடைபெற் றது. தோழர்கள் க. அன்பழ கன், ஆர். டி. அரசு, அ. ரகுநா தன் சொற்பொழிவாற்றினர். தீர்மானங்கள் பல நிறைவேற் றப்பட்டன.

மண் அரிப்பைத் தடுக்க வந்த செடி!

(:)

ஆண்டுக்கு ரூ. 12 கோடி தருகிறது!

முந்திரியின் வரலாறு தரும் விவரங்கள்

மேற்கு கடற்கரையில் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு வர்த்தகத் துறையில், முடிசூடா மன்னர்களாக விளங்கிய போர்ச்சுகீசிய, பிரேஜிலிருந்து ஒருவித மரத்தைக் கொண்டு வந்தனர்.

மேற்குக் கடற்கரையில் மண் அரிப்பைத் தடுப்பதற்காக இம் மரம் நடப்பட்டது. ஏனெனில், இதன் வேர்கள் பூமியில் ஆழப் பதிந்து மண் அரிப்பு ஏற்படா மல் தடுத்துவிடுகிறது. மற்ற மரம், செடிகள் வளர முடியாத பாழ் நிலங்கள், பாறைகள் நிறைந்த இடங்களில் இது செழிப்பாக வளர்ந்தது.

ஆனால், சில ஆண்டுகள் ஆன பிறகுதான் இதன் பழமும், கொட்டையும் சத்துள்ள உண வுப் பொருள்கள் என்று கண்டு பிடிக்கப்பட்டன. இதற்கு முந்திரி என்று பெயரும் கொடுத்தனர்.

அமெரிக்காவில் 25 ஆண்டு களுக்கு முன்பாக 50 டன் முந் திரிதான் செலவானது. இப் போது 20,000 டன்னாக உயர்ந் திருக்கிறது. இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாவதில் முக்கால் பகு தியை அமெரிக்காதான் வாங்கிக் கொள்கிறது.

முந்திரிப் பருப்புக்கு பிரிட்டன் கானடா, ஆஸ்திரேலியா, தென் அமெரிக்கா, ஐரோப்பிய நாடு களிலும் நல்ல கிராக்கி இருக் கிறது.

இந்தியாவின் முந்திரி சாகுபடி யாகும் நிலப் பரப்பு 2,28,228 ஏக்கர், சென்னை மாநிலத்தில் மட்டும் கிழக்கு, மேற்கு கடற் கரை பேராங்களில் 1,85,089 ஏக்கர் பயிராகிறது. திரு— கொச்சியில் 82,925 ஏக்கரும், பம்பாயில் 4,509 ஏக்கரும், குட கில் 155 ஏக்கரும் பயிராகின்றன.

முந்திரி உற்பத்தியில் இந்தியா தான் உலகிலேயே முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. மேற்கு கடற்கரையில்தான் முந்திரியை பதம் செய்யும் தொழிற்சாலைகள் அதிகம். இத்தொழிற்சாலைகளில் 78 சத விகிதம் பெண்களே வேலை பார்க்கின்றனர்.

சென்ற 25 ஆண்டுகளில் முந்திரி ஏற்றுமதி 1,000 டன்னி லிருந்து யுத்தத்திற்கு பின்பு 14,000 டன்னுக்கு உயர்ந்திருக் கிறது. சென்ற ஆண்டு ரூ 12,76,00,000 பெறுமான முள்ள 24,417 டன் முந்திரி ஏற்றுமதி செய்யப்பட்டது.

முந்திரி கொட்டை தோலிருந்து ஒருவித எண்ணெய் எடுக்கப்படு கிறது. இது பல ரசாயன கலப்புகளுக்கும் சாயம், வார் னிஷ், இங்கி கைத்தொழில் பொருள்களுக்கும் உபயோகமா கிறது.

முந்திரிப் பழத்திலிருந்து ஜாம், சாடி முதலியவைகள் செய் யப்படுகின்றன.

சமீபத்தில் இந்திய விவசாய ஆராய்ச்சி கௌன்சில் செய்த ஜெபர்களை பெட்டி முந்திரி பயிராகும் நிலத்தை விஸ்தரிக்க வும் தொழிலை அபிவிருத்தி செய் யவும் இந்திய சர்க்கார் யோசித்து வருகிறது.

நல்லெண்ணம்கொண்டோர் ஆதரிப்பர்

தாய்க் குலம் தரும் ஆதரவு!

கவர்னர் சம்பளம் பற்றிய திராவிடர் கருத்துரை

ஐயா,

நமது வரிப் பணத்திலிருந்து சுமார் பத்து லட்சம் ரூபாயை கவர்னருக்கு ஏன் கொட்டி அழ வேண்டும்? இந்நாட்டின் நலி வுற்ற சமுதாயத்தை சரிநிகர் சமானமாகத் திருத்த, திட்டம் வகுக்க பணம் இல்லாத சர்க் கார், பழனி பாட், கோயிலுக் குச் செல்ல, விருந்துபசாரங் களில் கலந்து கொள்ள பத்து லட்ச ரூபாயை தனி மனிதனுக்கு ஏன் கொடுக்க வேண்டும்." கவர் னரின் சம்பள செலவினங்களைக் குறைக்கப் போராட்டம் நடத்தி னால், நாட்டின் நன்மைக்கு நல்லது செய்பவர்கள், அப் போராட்டத்தில் பங்கு ஏற்பார் கள் என்பது உறுதி.

பழனியம்மாள்,
மணக்கால்.

★

ஐயா,

சாலையோரங்களில் தமிழ் மக் களாகிய நம் இனத்தவர், இருக்க இடமின்றி, மழையில் நனைந்து, வெய்யிலில் காய்ந்து வாடு வதைக் காண்கிறோம். இவர்க ளுக்கு வசதியளிக்காமல் பாரா முகமாக இருக்கிறது அரசாங் கம். ஏன்? பணம் இல்லையா?— இதோ இருக்கிறது — கவர்னர் சம்பளம் என்னும் பெயரிலே லட்சக் கணக்கான ரூபாய் செல விடப்படுகிறது; இதைக் குறைத்து மக்களின் நலனுக்காக செலவிடலாமே! இதை சாதா ரணமாக அரசாங்கம் செய்து விடாது. எனவே, இதற்கொரு போராட்டம் தேவை. எனவே மக்களின் நலனில் அக்கறை கொண்டோர் அனைவரும் இதை ஆதரிக்கத்தான் செய்வர்—ஆத ரிக்கத்தான் வேண்டும்.

ந. கிருஷ்ணமூர்த்தி,
சென்னை—1.

★

ஐயா,

பட்டினிச் சாவுகள் மலிந்துள் ளது இந்நாடு; ஆனால் பதவியிலே உள்ள கவர்னருக்கு பத்து லட் சம் ரூபாய் தரப்படுகிறது. எந்த முறையிலும் இது நியாயமென்று கூறமுடியாது. ஆகவே, கவர்னர் சம்பளத்தைக் குறைக்கவேண்டு மென்று அண்ணா அவர்கள் 6 மாத நோட்டீஸ் கொடுத்துள் ளதை வரவேற்கிறோம். போரா டத் தயார்!

12 தோழர்கள்,
பொள்ளாச்சி.

★

ஐயா,

தற்பொழுது கிராமங்களில் கூலி ஆட்களுக்கு தினக்கூலி எட் டணாவிலிருந்து அதிகமாக ரூ 1—8—0-க்கு மேல் போகாத நிலையில் உள்ளது. ஆனால் கவர் னர் சம்பளமோ தினம் ரூ 2730 இந்த ஏற்றத் தாழ்வை நீக்கக் கும்போது அரசியல் சட்டத்தை எதிர்த்து கவர்னர் சம்பளத்தைக் குறைக்க போராடத்தான் வேண்டும்.

சி. முருகேசன்,
சென்பகராயநல்லூர்.

★

ஐயா,

தமிழன் ஆண்ட இத்தரணி யிலே, மக்கள் பசி, பசி என்று கதறும் இந்த நேரத்திலே ஆண்டு ஒன்றுக்கு கவர்னரின் சம்பளம் 10 இலட்சம் ஐயகோ! இதைக் கண்டு அவல நிலையில் இருக்கும் பாமர மக்கள் பொறு மையின் எல்லையைக் கடந்துள் ளனர். கவர்னரின் சம்பளத் தைக் குறைக்க தொடங்கும் இப்போராட்டத்திற்கு எல்லாப் பகுதிகளிலிருந்தும் ஆதரவு கிட்டும் என்பதில் சந்தேகமே கிடையாது.

வை. வி. அடைக்கலம்,
சி. தங்கவேலுசாமி,
புதுக்கோட்டை.

ஐயா,

உலகத்தில் எந்த நாட்டை எடுத்துக் கொண்டாலும் அந் நாட்டிலுள்ள மக்களின் சுகவாழ் வுக்காகவே அரசு நடக்கிறது. மக்களும் சுகமாக தங் களுடைய வாழ்நாட்களை கழிக் கின்றனர். நோய், பசி, பகை இவை மூன்றும் அற்றதுதானே "நாடு" என்று வள்ளுவர் கூறு கிறார். ஆனால், நம் நாட்டில், எந்தப் பக்கம் திரும்பினாலும் நோயால் பீடிக்கப்பட்டவர், பசியால் மெலிந்தோர், பகையால் அரசியல் குற்றவாளியாகத் தானே காட்சியளிக்கின்றனர்?

இவ்வாறு நாட்டில் நடைபெறு வதற்குக் காரணம் மக்களிடத் தில் பணம் இல்லாத குறையே யாகும். அதே நேரத்தில் சிறிய தொரு கும்பத்தை நடத்தும் கவர்னர் ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய் ஊதியம் பெறு கிறார். இவ்வாறு இவரிடத்தில் ஆண்டு ஒன்றுக்கு இவ்வளவு பணம் சேர்ந்துவிட்டால் நாட் டில் எவ்வாறு சுபிட்சம் நிலவும்?

சம்பளம் குறைப்பு போராட் டம் தொடங்குவது சாலவும் பொருத்தமேயாகும். இப் போராட்டம் இரத்த புரட்சியாக மாறினாலும் வெற்றியே அடை வோம் என்பது திண்ணம்.

வே. தமிழ்மணி
சென்னை-4

★

ஐயா,

சாலைகளிலும், ஓலை குடிசை களிலும், கையால் மெய்யைப் போர்த்தித் திரிபவர்களும், வாழ முடியாமல் வீழ்ந்து மடிகின்றவர்களும் ஏராளமாய் இருக்கிற இந்த நாட்டில், ஒருவ ருக்கு மட்டும் மக்களுடைய வரிப் பணத்திலிருந்து ரூ. 10 லட்சம் கவர்னர் என்ற பெயராலே தரப் படுவது தகாதது மட்டுமல்ல; கண்டிக்கத் தக்கது. இதை நிறுத்தும் வகையாகவும் நமது இலட்சியமான திராவிட நாடு பிரச்சினைக்கு வழிகோலும் வகை யாகவும் அமையும் விதமாக ஒரு போராட்டம் தேவை.

அ. முத்தமிழன்,
பொன்மலை.

★

ஐயா,

திராவிடத்தில் பட்டினிப் பட் டாளம் நாளுக்கு நாள் பெருகி வரும் இந்நேரத்தில், அண்ணா ஆரம்பிக்கும் "கவர்னர் சம்ப ளக் குறைப்புப் போராட்டம்" மிக மிக அவசியமானது.

"செய் அல்லது செத்து மடி" என்பது திராவிடரின் பண்பு! திராவிட முன்னேற்ற கழகம் இந்தப் போராட்டத்தை ஆரம் பிக்கு முன், அண்ணல் காந்தி யின் வழி வழி வந்ததாகக் கூறும் இந்த அரசாங்கத்தார், அவர் களாகவே சம்பளத்தைக் குறைப் பது நல்லது—விவேகமும் கூட!

"ஆழி"
சென்னை—21.

★

ஐயா,

பாராண்ட தமிழன் பஞ்சத் தால் வாடும்பொழுது பத்து இலட்சம் ரூபாயா கவர்னருக்கு? கஞ்சிக் கலயத்தில் கையை விட்டு தமிழன் அழாவுகையில், பாலும், பழ ரசமும் அருந்துகின்றார் கவர்னர்! இக்கிலை இன்னும் இருக்க வேண்டுமா? எதையும் தாங்கும் இதயம் கொண்ட இளைஞர்களே! கவர்னர் சம்ப ளத்தைக் குறைக்க வெஞ்சமர் புரிவோம்! வெற்றி பெறுவோம்! விதண்டாவாதம் புரிவோருக்கு விளங்கச் செய்வோம்!

க. மு. இராசன்,
கல்லாவி.

திரும்பி வரும் தமிழர்களால் தொல்லை ஏதும் இல்லை!

சென்னை முதல் அமைச்சரின் கருத்து

5,000 பேர் வருவது பற்றி தகவல் கிடைத்துள்ளதாம்!

சென்னை, ஆக. 18—

இலங்கையில் தற்காலிக வாசமாக இருந்து காலாவதியாகியவர்கள் 5,000 பேர், கூடிய விரைவில் சென்னைக்கு வருகிறார்கள் என்பது பற்றி சென்னை சர்க்காருக்கு மத்திய சர்க்காரிடமிருந்து தகவல் வந்திருக்கிறதாம்.

ஆனால் வருகிறவர்கள் எந்த விதமானவர்கள், என்ன வேலை செய்துகொண்டிருந்தவர்கள் என்பது அறிவிக்கப்படவில்லையாம்.

இச்செய்தியை சென்னை முதல் அமைச்சர் கே. காமராசர் நிருபர்களிடம் கூறினார்.

வருகின்ற மக்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது தெரிந்தால் ஒழிய அவர்களுக்கான ஏற்பாடுகள் பற்றி கூறுவது கடினமாகும் என்று அவர் மேலும் கூறினார்.

வீட்டு வேலைக்காரர்கள் யாரும் திரும்பி வரமாட்டார்கள் என்றும், சிறு கடைகள் வைத்திருப்போர், பெரிய கடைகளில் வேலை செய்வோர் ஆகியவர்களே திரும்பி வருவார்களென்றும், அவர்கள் இங்கே வாழ்க்கையை அமைத்துக் கொள்வது சுலபம் என்றும் அவர் கூறினார்.

"20,000 பேர் திரும்பி வர இருக்கிறார்களே!" என்று கேட்டபோது, "இதனால் சென்னை ராஜ்யத்திற்கு பிரச்சினை எதுவும் உண்டாகாதென்றும், ஆண்டு தோறும் 5,000 பேர் இலங்கைக்குப் போய் வருகின்றனர் என்றும் கூறினார்.

சென்னையில் திரு-தமிழர் தலைவர்கள்

முதலமைச்சரை சந்தித்தனர்

சென்னை, ஆக. 19—

டில்லிக்குச் செல்லும் வழியில் சென்னை வந்துள்ள திரு—தமிழர் தலைவர்கள், சென்னையின் முதல் அமைச்சர் காமராசர், நிதி அமைச்சர் சுப்பிரமணியம், தேவதாஸ் காந்தி, ஆச்சாரியார் ஆகியோரைச் சந்தித்துப் பேசினர்.

சென்னைக்கு வந்திருக்கும் தோழர் வி. கே. ராஜா பிள்ளையின் வீட்டை நாகர்கோவில் போலீசார் சோதனையிட்டனர் என்று தெரிகிறது. நாகர்கோவில் டி. வி. டி. உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் எம். வி. சந்தான ராஜ் திரு-கொச்சி போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

திரு—தமிழர் பிரச்சினை

கஜபதி எம். எல். ஏ. சுற்றுப்பயணம்

திருவனந்தபுரம், ஆக. 16—

திரு—கொச்சி தமிழ்ப் பகுதிகளில், சென்னை மேல்சபை உறுப்பினரான திரு. ஏ. கஜபதி (நாயகர்), இன்றும் இதுவரும், அண்மையில் அப்பகுதியில் நடைபெற்ற போராட்டங்கள் குறித்தும், இன்று அங்கு நிலவும் சூழ்நிலைகள் குறித்தும் ஆராய்ந்து அறிவதற்காகச் சென்றவர்கள் சுற்றுப் பயணம் செய்து வருகின்றனர்.

அவர்கள், அம்பாசமுத்திரம் பிரதேசம் சுற்றிய இடங்களையும் பார்த்

கழகக் கூட்டம்

★

மானவாம்

அழகிரி திடலில்

21—8—54 மாலை 6 மணிக்கு

தலைவர் : வே. பாணன்

பேசுவோர் :

மா. மாணிக்கம்
வை. விழிநாதன்
ஜே. பி. ஜேம்ஸ் வில்லியம்

வருந்துகிறோம்

★

தோழர் எம். என். முத்து அவர்களின் தந்தையும், தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களின் மாமனாருமான தோழர் எம். சுப்ரமணியம் அவர்கள் சென்னையில் 18-8-54 புதன் அன்று மாலை 5 மணிக்கு இயற்கை எய்தினார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். நமது ஆழ்ந்த அனுதாபம் உரித்தாகுக—ஆ-ர்.

கம்யூனிஸ்டுகளின் 'நேரடி நடவடிக்கை!'

ஆந்திராவில் இதுவரை 500 பேர் கைது செய்யப்பட்டனர்!

கர்னூல், ஆக. 18—

மதுவிலக்கைத் திரும்பப் பெற வேண்டுமென்று கோரி ஆந்திர சர்க்காரை எதிர்த்து "நேரடி நடவடிக்கை"யில் ஈடுபட்டிருக்கும் ஆந்திர கம்யூனிஸ்டு கட்சியினரில் இதுவரை 500 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கடந்த நான்கு நாட்களாக மதுவிலக்கை எதிர்த்து நடைபெறும் இந்த "நேரடி நடவடிக்கை"யில் எந்தவித அசம்பாவிதமான சம்பவமும் ஏற்படவில்லையாம்!

இந்தக் கிளர்ச்சி, மதுவிலக்கை மீறி நேரடியாக மரத்திலிருந்து கள் இறக்குவது என்ற முறையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறதாம்.

கைது செய்யப்பட்டவரில் அதிகமான பேர் மேற்கு கோதாவரி மாவட்டத்தினராவர். இன்னும் விசாகப்பட்டினம், ஸ்ரீகாகுளம், கிருஷ்ணா, குண்டூர் ஆகிய மாவட்டங்களிலும் இந்த 'நேரடி நடவடிக்கை' தொடர்ந்து நடைபெறுகிறது என்று தெரியவருகிறது.

இராணுவ இரயில் விபத்து

ஐவர் மரணம்; ஐம்பது பேருக்கு காயம்!

பம்பாய், ஆக. 18—

மேற்கு ரயில் தொடரின் உள்ள ரட்லம்—கோட்டா பிரிவில், டில்லி நோக்கிச் சென்றுகொண்டிருந்த விசேட இராணுவ ரயில், லவானி மண்டி, குர்லாசி ஆகிய இடங்களுக்கிடையில் தடம் புரண்டதில் 5 பேர் கொல்லப்பட்டனர், 50 பேர்கள் படுகாயப்பட்டனர். அவர்களில் 9 பேரின் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது என்று தெரிகிறது.

விபத்து நடந்த இடம் பம்பாயிலிருந்து வடகிழக்கே 568 மைல் தொலைவிலிருக்கிறதாம்.

விபத்துக்கானவர்களுக்குத் தேவையான மருத்துவ உதவி ரெயில்வே அதிகாரிகளால் உடனே தரப்பட்டதாகத் தெரிகிறது.

இந்த விபத்தினால் இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்கு போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கும் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

நபி பருப்பு வகைகள் சாகுபடி

கடப்பு ஆண்டில், நபி பருப்பு வகைகளின் சாகுபடியின் நிலம் 1,11,30,000 ஏக்கராவும், உற்பத்தி அளவு 20,75,000 டன்னாக இருக்குமென்று தெரிய வருகிறது.

பல்லாயிரம் பேருக்கு வேலை தரும் புதிய தங்கச் சுரங்கம்!

— (:) —

இடைவிடாத உழைப்பினால் கண்டுபிடிக்கப்பட்டது

தோண்டியெடுக்க மத்திய அரசாங்கம் உதவும்?

கோலார் தங்கவயல் பகுதியில், மிகப் பெரிய தங்கப் பாளங்கள் கொண்ட கற்கள் ஏராளமாகக் கிடைப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இடைவிடாது — சலிப்பாது பூமியைத் தோண்டிக்கொண்டிருந்ததின் பலனாக நாட்டில் பலருக்கு வேலை தரத்தக்க ஒரு புதிய பெரும் தங்கச் சுரங்கத் தொழிற்சாலை ஆரம்பிக்கும் அளவு, வெற்றி கிடைத்துள்ளது.

இந்தத் தகவலை, கோலார் தங்கச் சுரங்கக் கம்பெனிகளின் டைரக்டர் போர்டு தலைவர் எம். ஏ. சீனிவாசன் என்பவர் இந்தியக் குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் அங்கு வருகை தந்தபோது, அவரை வரவேற்றுப் பேசுகையில் வெளியிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"புதிதாகக் காணப்பட்டுள்ள தங்கக் கட்டிகளைத் தோண்டி எடுக்கும் தொழிலை மேற்கொள்ள, தேவையான சாதனங்களையும், சந்தர்ப்பத்தையும், ஆதரவையும் தரவேண்டும்.

இவை கிடைத்து, புதிய சுரங்க வேலை ஆரம்பமானால், எண்ணற்ற வருடங்களுக்கு ஆயிரக் கணக்கானவர்களுக்கு வேலை தர முடியும் மாநில மத்திய அரசாங்கங்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் நல்ல வருமானம் தரக்கூடும்.

இந்தியாவிலேயே கோலார் தங்க வயல்தான் மிகப் பெரிய, —ஏன்—ஒரே தங்கம் தரும் பூமியாகும்.

இன்னுமொரு மிகச் சிறிய சுரங்கம் ஐதராபாதத்தில் உள்ள ஹட்டி எனும் இடத்தில் இருக்கிறது. அவைகளில் ஒன்று அண்மையில் மூடப்பட்டு விட்டது. அந்த மூடப்பட்ட சுரங்கம், உலகத்திலேயே உள்ள தங்கச் சுரங்கங்களில் மிக மிக ஆழமானது என்ற பெருமையைப் பெற்றிருந்தது.

இங்குள்ள இந்த கோலார் தங்க வயல் சுமார் 20,000 தொழிலாளர்களுக்கு வேலை தருகிறது," என்றார்.

குடியரசுத் தலைவர் ராஜேந்திர பிரசாத் பேசுகையில், "இந்தப் பகுதியில் உள்ள தங்கச் சுரங்கத் தொழிலுக்கு எல்லா உதவிகளையும் டெல்லியும், மைசூரும் உதவுமென்றும், புதிதாக கண்டுள்ள தங்கச் சுரங்கத்தில் வேலை ஆரம்பத் தேவையான உதவிகளை மத்திய அரசாங்கம் நிச்சயம் செய்யும் என்றும், சுரங்கத் தொழிலின் நடைமுறைகளைக் கண்டறிந்து ஆய்வு செய்ய மத்திய அரசாங்கம் ஒரு விசாரணைக் குழுவை நியமித்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

ஜப். - பிரதமர் இந்தியா வரமாட்டார்!

ஜப்பானியப் பிரதமர் யோஷிடா, தான் மேற்கொள்ளவிருக்கிற உலக சுற்றுப் பிரயாணத்தின்போது, ஏற்கனவே அறிவித்திருந்தபடி இந்தியாவுக்கு வர இயலாதென்று தெரிகிறது.

காலச் சுருக்கத்தினால், இந்தியா, பாகிஸ்தான், தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு யோஷிடா வருகை தராமலேயே தனது உலக சுற்றுப் பயணத்தை முடித்துக் கொள்வார் என்று அறிவிக்கப்படுகிறது.

பாக். - பிரதமர் அமெரிக்கா செல்கிறார்!

ஜனாதிபதி ஐசனோவரின் அழைப்பிற்கிணங்க, பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலி அமெரிக்காவிற்கு அக்டோபர் மாத ஆரம்பத்தில் செல்வார் என்று அறிவிக்கப்படுகிறது.

அவர் அமெரிக்காவில் பல நகரங்களுக்கும் சென்றுவிட்டு, வாஷிங்டனில் அக்டோபர் 16-ம் தேதி முதல் 18-ம் தேதி வரை தங்குவார் என்றும், 18-ம் தேதியன்று ஜனாதிபதி ஐசனோவர் முகம்மது அலிக்கு விருந்தொன்று தருவார் எனவும் தெரிய வருகிறது.

இந்த அழைப்பிற்குக் காரணம், இப்போது பிரதமராயிருக்கும் முகம்மது அலி, 1952—53ல், அமெரிக்காவில், பாகிஸ்தானின் தூதுவராயிருந்த காலத்தில், அமெரிக்காவுடன் கொண்டிருந்த நட்புறவைப் புதுப்பித்துக் கொள்வதற்குத்தான் என்று 'டைம்ஸ் மாணிகை'யிலிருந்து வந்த அறிவிப்பில் காணப்படுகிறது.

அமெரிக்காவில் புதிய அமைச்சர்

ஹூவர் நியமிக்கப்பட்டார்

வாஷிங்டன், ஆக. 17—

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஹூவரை அமெரிக்க உதவி இராஜாங்க அமைச்சராக ஐசன்ஹோவர் நியமித்திருக்கிறார்.

உதவி இராஜாங்க அமைச்சர் பெடல் ஸ்மித் இராஜினாமா செய்ததால் இப் புதிய நியமனம் செய்யப்பட்டிருக்கிறது.

இராயிட்டர் ஒன்றியத்தின் கழகத் தொண்டர் தோழர் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] ஆசிரியர் : கே. என். [illegible]

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக சமுக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

21, 22—8—1954-ம் தேதிகளில், காஞ்சிபுரம் கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில் நடைபெறும்

21—8—54 சனிக்கிழமை :	22—8—54 ஞாயிற்றுக்கிழமை :
சமுக சீர்திருத்த மாநாடு	அரசியல் மாநாடு
தலைவர் : கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்	தலைவர் : இரா. சு. தங்கப்பழம்
துவக்குநர் : எம். ஜி. ராமச்சந்திரன்	துவக்குநர் : எம். எஸ். மணி

பொதுச்செயலாளர் அண்ணாதுரையும்—எல்லா கழகத் தோழர்களும் கலந்துகொள்வர்

சனி இரவு : 'சந்திரமோகன்' ★ ஞாயிறு இரவு : 'அம்மையப்பன்'

என். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். ஆர். சாமிநாதன், எம். என். கிருஷ்ணன் தெட்சணாமூர்த்தி, ஜி. சகுந்தலா முதலியோர் நடிக்கும் நாடகங்கள் நடைபெறும்

கட்டணம்:—வ. தமு கு 5; பிரதிநிதி ரூ 3; ஆதரவாளர் ரூ. 2; பார்வையாளர் ரூ. 1. பெண்களுக்கு அணா 8.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★